மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# புறநானூறு காட்டும் தமிழ் மன்னர்களின் ஆளுமை

# The Personality of Tamil Kings Shown in Purananuru

ஷாலனி சேகர்/ Shaline Segar[1]
[1]M. Ed. Scholar, Sultan Idris Education University
Corresponding Email: shalinesegar@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

ஆளுமை என்பது ஒருவரின் தனித்தன்மை வாய்ந்த அமைப்பு எனலாம். ஒருவரது நடை, உடை, பாவனை, குணம், உணர்ச்சி, அறிவு, ஆற்றல் போன்றவற்றின் வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்ட மொத்த வெளிப்பாடு ஆளுமை எனலாம். 'பர்சனாலிட்டி' (Personality) என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இச்சொல், முகமூடி, மறைப்பு எனும் பொருள் கொண்ட 'பர்சொனே' (Persone) என்ற இலத்தீன் சொல்லிலிருந்து வந்தது. ஆகவே, ஆளுமை என்பது ஒருவரிடம் மறைந்திருக்கும் ஒருங்கமைந்த பண்புகள் எனக் கருதலாம். இது தனி மனிதர்களின் ஒட்டு மொத்தப் பண்புத் தொகுதி எனலாம். அவ்வகையில், சங்கத் தமிழ் மன்னர்கள் தனக்கெனத் தனித்தன்மையான ஆளுமைகளைக் கொண்டு சிறந்திருந்தனர். இதனைப் புறப்பாடல்களில் காணமுடிகிறது. புறம் என்பது ஓர் ஒப்பற்ற வீரத்தைப் பற்றிப் பேசுவது. புறப்பாடல்களில் தமிழர்களின் வீரத்திற்கே முதலிடம் அளிக்கப்பட்டுள்ளதை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூறு பாடல்கள் நன்கு விளக்குகின்றன. இனக்குழுத் தலைவன் முதல் மூவேந்தர்கள் வரை பல்வேறு காலங்களில் வாழ்ந்த பல்வேறு வீரர்களின் சிறப்பையும் தமிழர்களின் அறப்பண்பாட்டையும் விளக்கும் விதமாகப் புறநானூற்றுப் பாடல்கள் இடம் பெறுகின்றன. இதில் வீரத்தை முன்னிறுத்தி எழுந்த போர்களைப் பற்றியும் பல குறிப்புகள் காணப்படுகின்றன. புறப்பாடல்களில் கூறப்பட்டுள்ள போர்களைக் காணும்போது, இவற்றில் பல தமிழ் மன்னர்களின் வீரத்தைப் போர்த்துறையில் அறியமுடிகின்றது. இதன் அடிப்படையில் தமிழ் மன்னர்களின் ஆளுமைப்பண்புகளை எவ்வாறு புறநானூறுப் பாடல்களில் அமையப் பெற்றுள்ளன என்பதை ஆய்வு செய்வதாகவே இந்த ஆய்வுக் கட்டுரை அமையப் பெற்றுள்ளது.

**கருச்சொற்கள்:** மன்னர்களின் ஆளுமை, புறநானூறு, சங்க இலக்கியம், போர், ஆளுமைப் பண்புகள்

**Abstract**

Personality is a person's unique characteristic. Personality is the total expression of a person and includes the growth and maturity of one's style, dress, habits, emotions, intelligence, energy, etc. Personality can be thought of as a set of inherent characteristics inherent in a person. It can be the aggregate character block of individual human beings. Thus, the Sangha Tamil kings excelled with their own unique personalities. This is evident in the Purananuru. Puram speaks of incomparable heroism. One of the eight books in Ettuttokai Compilation of classical Tamil literature Patinen Merkanakku, the Purananuru songs, clearly explains that the heroism of the Tamil kings is given priority in the hymns. These songs, which fall under the Agavalpa category, are written by more than 150 poets. There are also many references to battles fought in the Purananuru songs. When we see the actions mentioned in the songs, many of these Tamil king's bravery can be seen in the field of war. Based on this, this research paper is to analyze how the personality traits of the Tamil kings have been found in Purananuru.

**Keywords:** Purananuru, war, personality traits, sanga ilakkiyam

**முன்னுரை**

உலக இலக்கிய வரலாற்றில், அகம், புறம் என்ற இரு பாகுபாடுகளுடன் இலக்கியங்களைப் பெற்ற ஒரே மொழி தமிழ்மொழி. 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ் மக்களின் அகம், புறவாழ்க்கை முறைகளை இன்று நமக்குப் படம் பிடித்துக்காட்டும் சான்றுகளாகச் சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன. சங்க இலக்கியங்கள் என்பன எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். எட்டுத்தொகையுள் அடங்கும் எட்டு நூல்களுல் ஒன்று புறநானூறு. நானூறு பாடல்கள் அடங்கிய புறநானூற்றைப் போர்முறை வாழ்வின் இலக்கியம் எனலாம். அகவற்பா வகையைச் சேர்ந்த இப்பாடல்கள், 150க்கும் மேற்பட்ட புலவர்களால் எழுதப்பட்டவை. அக்காலத்தில் தமிழகத்தை ஆண்ட அரசர்களின் வீரம், போர், கொடை ஆட்சிமுறை முதலியவற்றையும் சமூகம், அரசியல், பண்பாட்டு நிலைகளையும் புறநானூறு காட்டுகிறது.

**ஆளுமை**

ஆளுமை என்பது ஒருவரின் தனித்தன்மை வாய்ந்த அமைப்பு எனலாம். ஒருவரது நடை, உடை, பாவனை, குணம், உணர்ச்சி, அறிவு, ஆற்றல் போன்றவற்றின் வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்ட மொத்த வெளிப்பாடு ஆளுமை எனலாம். அவ்வகையில் புறத்துறைகளில் ஒன்றாக எண்ணத்தோன்றும் வீரம், மன்னர்களின் ஆளுமை என்னும் பரந்துபட்ட பொருளைத் தருவதாக அமைகிறது. போர்க்கள நோக்கில் மன்னர்களின் ஆளுமை என்பது வீரத்தைக் குறிக்கும். உடல் வன்மையாலும் படை வலிமையாலும் பகைவர்களை வென்று நிற்றல் பெரும் மதிப்பாகக் கருதப்பட்டது. வீரத்தின் அடிப்படையில் திகழும் உணர்வு அறமேயாகும். இனி பறப்பாடல்களில் வெளிப்படும் மன்னர்களின் ஆளுமைகளை விரிவாகக் காண்போம்.

**கரிகாற் பெருவளத்தான்**

சோழ மன்னர்களுள் கரிகால் பெருவளத்தான் வீரத்திலும் கொடையிலும் சிறந்தவராக விளங்கினார். அவருடைய ஆளுமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

யானையைச் செலுத்திய கால்களையும் வீரக்கழலால் தேயப்பெற்ற நல்ல இலக்கணம் பொருந்திய அடியையும், அம்பு தொடுத்துக் குவிந்த கையும், கண்ணைக் கவரும் ஒளியுடன் கூடிய வில்லையும், பிறரை மறுத்துத் திருமகள் இருப்பதற்குரிய மலர்ந்த மார்பினையும், களிற்றினை வெல்லும் வலிமையும் உடைய மன்னனே என்று கருங்குழலாதனார் பாடியுள்ளார். இதனை,

“களிறு கடைஇய தாள்,
கழல் உரீஇய திருந்துஅடிக்,
கணை பொருது கவிவண் கையால்,
கண் ஒளிர்வரூஉம் கவின் சாபத்து
மா மறுத்த மலர் மார்பின்,

தோல் பெயரிய எறுழ் முன்பின்"

என்ற பாடல் அடிகளால் உணர்த்துகிறார். மேலும், பகலென்றும் இரவென்றும் எண்ணாது பகைவரது ஊரைச் சுடுகின்ற தீயினது ஒளியில் கூவியழைத்தலும், அங்குள்ளவர்களைக் கதறி அழுது ஒலியெழுப்புமாறு, அவர்களின் நாட்டைக் கொள்ளை அடிப்பதிலும் விருப்பமுடையவராகக் கரிகாலன் இருந்துள்ளார்.

**தித்தன்**

இவன் உறையூரின் கண் இருந்து ஆட்சி செய்த சோழன் வன் தித்தன் எனவும், தித்தன் வெளியன் எனவும், வீரை வேண்மான் வெளியன் தித்தன் எனவும் இலக்கியங்களில் குறிக்கப் பெறுகின்றான்.

"நொச்சி வேலித் தித்தன் உறந்தைக்
கல்முதிர் புறங்காட்டு அன்ன
நொச்சி வேலித் தித்தன் உறந்தை
தித்தன் பெண்ணெல் வேலி உறந்தையன்ன
வெல்போர் பேரருந்தித்தன்"

என்ற வரிகளில் தித்தன் என்பவன் சினம் மிக்கப் படையுடன் பேராற்றல் உடையவர் என்பதையும், பாணரையும் வலியால் பலரையும் பாதுகாக்கும் வள்ளல் என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

**அதியமான்**

ஔவையார் அதியமான் சிறப்புக் குறித்தும் பல பாடல்களைப் பாடியுள்ளார். அதியம் மீது மிகுந்த நட்பு கொண்ட இவர் பகைநாட்டு அரசர்களிடம் சென்று அதியனின் சிறப்பைக் கூறி போரைத் தடுத்த நின்ற பெருமை இவரைச் சாரும். பகைவர்களை நோக்கி நீங்கள் போர்க்களம் தவிருங்கள் போரை எதிர் நோக்கியவனாய் எம்மிடத்தும் ஒரு வீரன் உள்ளான். அவ்வீரன் ஒரு நாளில் எட்டு தேரைச் செய்யும் தச்சன், ஒருமாதம் முயன்று செய்த தேர்க்காலறிகு ஒப்பானவன்.

"களம் புகல் ஓம்பமின் தெவ்வீர்! போர் எதிர்ந்து
எம்முளும் உளன் ஒரு பெருநன், வைகல்
எண் தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த கால் அன்னோனே" (புறம்: 87)

என்ற பாடல் வரிகளில் அதியனின் வீரமும் பேராண்மையும் வெளிப்படுவதைக் காணலாம்.

அதுமட்டுமல்லாமல், மன்னன் தன் படை வீரர்களையும் பேராண்மை உடையவர்களாக வைத்திருந்தார். மன்னன் எத்தகைய ஆற்றல் பெற்றிருந்தாரோ அத்தகைய ஆற்றலை அவனுடைய படை வீரர்களும் பெற்றிருந்தனர். இதற்கு மன்னனின் ஆளுமையே காரணம்

எனலாம். முரசில் காற்று மோதும் ஓசையைக் கேட்ட அளவில் அது போர் பறையின் முழக்கம் எனக் கருதுவார் அதியன்; அவருடைய போரின் மீது கொண்ட நாட்டத்தை இதன் வழி உணரமுடிகிறது.

**பாரி**

வள்ளல்களின் வரிசையில் இரண்டாவதாக விளங்குபவர் பாரி. இவர் பறம்பு மலையை ஆண்ட குறுநில மன்னன் ஆவார்.

போர் செய்வதற்கு வாய்ந்த போது, அதியனைத் தப்ப விடாது பகைவர் படைகளிலே புகழ்ந்து வால் போரிட்டு அவர்களின் உள்ளங்களைக் கலங்கச் செய்த ஆற்றலும், அதனால் மூவேந்தர்களும் புறங்காட்டி ஓடச் செய்து, விரைந்து செல்லக்கூடிய குதிரையையும் வள்ளல் தன்மையும் உடையவர், பாரி. அவருடைய சுனையில் பூத்த தேன் மணக்கும் என்பார்கள். அதுபோலச் சினங்கொண்டு நெஞ்சினை உடையவனாக இருந்தாலும் தன் நாட்டு மக்களுக்கு நல் அரசனாகவும் பாதுகாக்கும் அரணாகவும் விளங்கினான் என்பதை

“வாள் அமர் வழக்கி
ஏந்து கோட்டு யானை வேந்தன் ஓட்டிய
கடும்பரிப் புரவிச் கைவண்பாரி”

என்னும் பாடல் வரிகள் பாரியின் பேராண்மையை எடுத்தியம்புகிறது.

**தலையாலங்கானத்துச் செருவென்று நெடுஞ்செழியன்**

பாண்டிய மன்னர்களில் குறிப்பிடத்தக்க மன்னனாக விளங்கியவன் தலையாலங்கானம். போர்களத்தில் சிறந்த முறையில் போரிட்டுப் பகைவர்களை அழித்ததினால் இம்மன்னனுக்கு இப்பெயர் வழங்கலாயிற்று.

இவருடைய வீரத்திற்கு ஆண்மான் புலியால் கொல்லப்பட்டுத் தன் குட்டியை அணைத்தபடி வேளை பூவை உண்டு பெண்மான் வாழும். அதுபோலச் செழியனால் அழித்த பகைவர் தம் மனைவியர் தம் மக்களுக்காக உயிர் வாழ்ந்து கைம்மை மேற்கொண்டு வேளைக் கீரையை உணவாகக் கொள்வர் என்று கூறுவதிலிருந்து நெடுஞ்செழியனின் பேராண்மைப் பண்பு புலப்படுத்தப்பட்டுள்ளது.

**நிறைவுரை**

எனவே சங்க காலத்து மன்னர்கள் ஆளுமையோடும் அருள் தன்மையோடும் நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாத்த சிறப்பினை நாம் பல நூல்களில் கற்றுணர்ந்துள்ளோம். அவர்களில் ஒரு சில மன்னர்களின் வீரச்சிறப்புக்களையும் ஆளுமைத்திறனையும் புறநானூற்றில் ஆராய்ந்து விளக்கும் வகையில் இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

**துணைநூற்பட்டியல்**

அருணா, அ. “புறநானூற்றுப் பாடலில் போர்த்திறம்”: பன்னாட்டு தமிழியல் ஆய்விதழ், தொகுதி 1, இதழ் 3, சனவரி 2019, பக். 76 – 78.

பரிமளம். வெ “புறநானூற்றில் பெண் ஆளுமை” புலம்: பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 2, இதழ் 1, சனவரி 2022, பக். 01-06.

புலியூர்க் கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை, முதற்பதிப்பு - 2010.